சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 850 / 2022**

வா.சா.1. செல்வமணி 03.09.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் சொத்தை பிரித்து கொடுக்க சொல்லி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எந்தெந்த சர்வே எண்ணில் நான் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.304/3 மற்ற புல எண்கள் எனக்கு சரியாக மனப்பாடமாக தெரியாது. எனது தாத்தா பெயர் கந்தசாமி கவுண்டர் என்றால் சரிதான். கந்தசாமிக்கவுண்டருக்கு பெருமாள் கவுண்டர், காளியப்பகவுண்டர் மற்றும் பழனியப்பகவுண்டர் ஆகிய மூவரும் மக்கள் என்றால் சரிதான். பெருமாள் கவுண்டரின் மனைவி ராமாத்தாள் என்றால் சரிதான். அந்த ராமாத்தாள் தான் எனது தாயார் என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் 2-ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பெருமாள்கவுண்டருக்கும் ராமாத்தாளுக்கும் பிறந்தவர்கள் தான் நானும், 1-ம் பிரதிவாதி சென்னிமலை என்றால் சரிதான். எனது தகப்பனாரின் உடன் பிறந்த சகோதரர் காளியப்பகவுண்டரின் மனைவி பெயர் தான் முத்தம்மாள் என்றால் சரிதான். காளியப்பகவுண்டர் - முத்தம்மாள் ஆகியோருக்கு பழனிச்சாமி மற்றும் செல்வமணி என்ற இரண்டு மக்கள் என்றால் சரிதான். எனது அப்பாவின் மற்றொரு சகோதரரான பழனியப்பவுண்டருக்கு மயிலாத்தாள், 6-ம் பிரதிவாதி கருப்புச்சாமி மற்றும் ராமாத்தாள் ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வம்சா வழி பட்டியல் தான் வாதியின் தகப்பனார் மற்றும் அவரது உடன்பிறந்த சகோதரரின் வம்சாவழி பட்டியல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1. (பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் போது குறியீடு செய்யப்பட்டுள்ளது.) கொடிவழியில் சொல்லப்பட்டுள்ள எனது தகப்பனார் மற்றும் எனது தகப்பனாருடன் பிறந்த சகோதரர்கள் இருவரும் இறந்து போய்விட்டார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1-ல் கண்ட அனைவருக்கும் கந்தசாமிகவுண்டர் சொத்துக்களில் பாக உரிமை உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் காளியப்பகவுண்டரின் வாரிசுகளையோ பழனியப்பகவுண்டரின் பெண்மக்களையோ தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அவர்களை தரப்பினர்களாக சேர்க்காததற்கு காரணம் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு எனது வழக்கறிஞருக்கு விபரம் சொன்னது யார் என்றால் யாருமே தகவல் சொல்லவில்லை. பிராதில் சொத்து விபரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களை எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் அதை என்னால் சொல்லமுடியாது. பிராதில் சொல்லியுள்ள 1 முதல் 9 இலக்க சொத்துக்களுக்கு ஆவணங்கள் எதுவும் தற்போது வரை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.09.04 10:36:39 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்